**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 30-08-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-08-30 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-08-31 | 2022-09-01 | 2022-09-02 | 2022-09-03 | 2022-09-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 8.0 | 5.0 | 4.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 34.0 | 34.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 26.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 75 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 55 | 55 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 6.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 160 | 180 | 230 | 230 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஆகஸ்ட் 31 முதல் 04 செப்டம்பர் வரை இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 25°C - 26°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 - 08 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

மழைக்காலம் தொடங்குவதால் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் வரவாய்ப்புள்ளதால் அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு சென்று தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் .

## குறுஞ்செய்தி :

பெறக்கூடிய மழையை பயன்படுத்தி மானாவாரியில் தீவனச் சோளம் அல்லது தட்டை பயிர் விதைப்பு மேற்கொள்ள வேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மல்லி கை | இதுவரை பெய்த மழை காரணமாக மல்லிகை செடிகளில் சத்து குறைபாட்டிற்கான இலைகள் மஞ்சளாவது, இரும்புச்சத்து குறைபாடு, வேர் அழுகல் மற்றும் வேர்ப்புழு அறிகுறிகள் தெரிந்தால் இரும்புச்சத்து குறைாட்டினால் இலைகள் மஞ்சளாவதைத்தடுக்க லிட்டருக்கு 5 கிராம் பெர்ரஸ் சல்பேட் கரைசலை 3 மாதங்களுக்கு ஒரு முறை தெளிக்கவேண்டும். வேர் அழுகளுக்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.25 சதம் கரைசலை செடியினைச்சுற்றி மண்ணில் ஊற்றவேண்டும். நல்ல வடிகால் வசதியுள்ள நிலங்களில் குண்டு மல்லியை பயிர் செய்வதன் மூலம் இந்நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். வேர்ப்புழு தாக்குதலுக்கு 5 கிராம் ப்யூரடான் குறணைகளை செடியைச் சுற்றி இட்டு மண்ணுடன் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். |
| நெல் | நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் கவனத்திற்க்கு காற்றின் உள்ள அதிக ஈரப்பதத்தினால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலுக் கானவாய்ப்பு உள்ளது. இலைப்பேன் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த, அசாடிராக்ட்டின் 2 மிலி /லி ஓட்டும்பசை உடன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அடுத்து வரும் நாட்களில் பெய்யும் மழை பயன்படுத்தி, இரண்டாம் களை எடுத்து, ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை மண்ணில் இட்டு செடிகளுக்கு மண்அணைக்கவும்.ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அடுத்து வரும் நாட்களில் பெய்யும் மழை பயன்படுத்தி, இரண்டாம் களை எடுத்து, ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை மண்ணில் இட்டு செடிகளுக்கு மண்அணைக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வளரும் பருவத்தில் உள்ள காய்கறிப் பயிர்களுக்கு தழை மற்றும் சாம்பல் சத்துக்களை மேலுரமாக இடலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் எதிர்பார்க்ப்படும் மழையை கெண்டு நீரை சேமிக்க தென்னையில் இளநிலை மற்றும் வளர்ந்த மரங்களுக்கு தேங்காய் மட்டைகளை குழிந்த பகுதி மேல் நோக்கிய வண்ணம் வட்டப்பாத்தகளிலோ அல்லது இரு தென்னை வரிசை களுக்கு இடைவெளிகளிலோ புதைத்து வறட்சிட் தாங்க ஏற்பாடு செய்யலாம். 100 தேங்காய் மட்டைகள் நார்ப்பகுதி மேல் நோக்கி இருக்குமாறு அல்லது 25 கிலோ தென்னை நார்க்கழிவை 1.5 மீட்டர் ஆரம் தூரத்தில் 30 செ.மீ அகலமும். 60 செ.மீ ஆழமும் கொண்ட குழிகளில் இடவேண்டும். தென்னை மட்டைகளை மட்டைகளை தென்னை மரத்திலிருந்து 3 மீட்டர் தள்ளி நீண்ட குழிகளில் 150 செ.மீ (5 அடி) அகலத்தில் இந்த மட்டைகளை போட்டு மூடி வைக்கலாம். இதன் மூலம் பருவ மழைக்காலத்தில் கிடைக்கும் நீரை சேமிக்கமுடியும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | மழை காரணமாக தீவனத்தில் பூஞ்சாணம் வர வாய்ப்புள்ளது எனவே தீவனத்தை மழை இல்லாத நேரங்களில் வெயிலில் காயவைத்துத் பின் கால்நடைகளுக்கு தீவனத்தை கொடுக்கவேண்டும் . தீவனத்தை மழையில் நனையாமல் பாதுகாக்கவும். |